DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

**Cr.M.P. No.3682/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **PW1** | Caste | : | |
| Name | : | ஜெகதீஸ்வரன் | Age | : | 34/2025 |
| Father's Name | : | கிருஷ்ணமூர்த்தி | Occupation | : | வசூல் மேலாளர் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **03rd day of February 2025.**

<u>முதல் விசாரணை</u> :

இவ்வழக்கில் புகார்தாரர் நிறுவனத்தில் அதிகாரம் பெற்ற முகவர் மற்றும் வசூல் மேலாளர் ஆவேன். வழக்கு விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும், என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். எதிரி மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். **( எதிரியின் கடன் கணக்கு மாதாந்திர தவணை விபர அறிக்கை ம.சா.ஆ.1 ஆகும்.) (கடந்த 22.02.2023- ந் தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் 382636 என்ற எண் கொண்ட ரூ.1,00,000/- த்திற்கு எதிரி எங்களது நிறுவனத்திற்கு வழங்கிய காசோலை அசல் ம.சா.ஆ. 02 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 23.02.2023-ந் தேதியிட்ட கலெக்சனுக்கு செலுத்திய காசோலை பொறுத்து எதிரியின் வங்கி கணக்கில் "**

(Funds insufficient) " என்ற குறிப்புடன்  வழங்கப்பட்ட ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ. 03 ஆக குறியீடு செய்யப்படுகிறது).  (கடந்த 07.03.2023- ந் தேதியிட்ட எனது நிறுவனத்தின் வழக்கறிஞர் மூலம் பணத்தை திருப்பி தர வேண்டி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ. 04 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 15.03.2023- ந் தேதியிட்ட மேற்படி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ- 05 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (கடந்த 30.03.2023 ம் தேதியிட்டு எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) ( எனக்கு எங்களது நிதி நிறுவனம் கொடுத்த அதிகார ஆவணம் நகல் ( அசலுடன் ஒப்பிடப்பட்டது)  ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). எதிரி மோசடியாக எங்களது நிறுவனத்திற்கு காசோலை கொடுத்து ஏமாற்றியதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.  மனுவில் சொல்லியுள்ள காரணங்களை ஏற்று வழக்கை கோப்பிற்கு எடுத்து விசாரித்து எதிரிக்கு தக்க தண்டணை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

-

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.

ஒம்/- S.விஜய் ஆனந்த்,

நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.